**சுருக்கம்**

கலை பண்பாட்டுத் துறை – 2015–2016 ஆம் ஆண்டு – தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் – சென்னை மற்றும் மண்டல அளவில் கோடை முகாம் நடத்துவது – நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண் 1–2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.113 நாள் 27.4.2015

திருவள்ளுவர் ஆண்டு 2046,
மன்மத வருடம் சித்திரை 14

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.31, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.26.2.2013.
2. அரசாணை (நிலை) எண்.70, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்.26.5.2014.
3. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடித ந.க.எண்.862/சசிம2/2015, நாள் 06.03.2015.

------

**ஆணை:–**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–2013 ஆம் நிதியாண்டில் சென்னை மற்றும் கலை பண்பாட்டு மைய மண்டலங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுவர் மன்றங்களின் சிறார்கள் பயன்பெறும் பொருட்டு கோடை முகாம் நடத்திட ஒரு சிறுவர் மன்றத்திற்கு ரூ.10,000/– வீதம் 32 சிறுவர் மன்றங்களுக்கு ரூ.3,20,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015 ஆம் ஆண்டில், சென்னை மற்றும் கலை பண்பாட்டு மைய மண்டலங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சிறுவர் மன்றங்களின் சிறார்கள் பயன்பெறும் பொருட்டு கோடை முகாம் நடத்திட ஒரு சிறுவர் மன்றத்திற்கு ரூ.10,000/– வீதம் 32 சிறுவர் மன்றங்களுக்கு ரூ.3,20,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2015 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாத இறுதிக்குள் தமிழகத்தின் அனைத்து மாவட்ட சவகர் சிறுவர் மன்றத்தின் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மற்றும் மண்டல அளவில் கோடைக்கால முகாம் நடத்துவதற்கு இத்திட்டத்தின் சிறப்புத் தன்மையைக் கருதி, ரூ.3.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, 2015 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாத இறுதிக்குள் தமிழகத்தின் அனைத்து மாவட்ட சவகர் சிறுவர் மன்றம் சார்பாக மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மற்றும் மண்டல அளவில் கோடைக்கால முகாம் நடத்தும் திட்டத்தை செயல்படுத்திட ரூ.3,20,000/–(ரூபாய் மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2205 – 00 கலையும் பண்பாடும் –102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் –JG சவகர் சிறுவர் மன்றத்திற்கு மானியங்கள் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"

(து.தொ.கு.2205 00 102 JG 0931)

6. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.20469/கல்விII/2015, நாள் 24.4.2015ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர்(பொ), கலை பண்பாட்டுத் துறை, சென்னை – 8.
கணக்கு அலுவலர், கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை – 8 /
செயல் அலுவலர், தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், சென்னை – 8.
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை– 9. (இருபடிகள்)
முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9 / 18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை – 9.

<u>நகல்</u>
நிதித் (கல்வி–II) துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலரின் தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பொது) துறை, சென்னை – 9.
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை – 9.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.